செய்தி வெளியீடு எண்: 498 நாள் : 12.10.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (12.10.2015) தலைமைச் செயலகத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 100 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 422 புதிய பேருந்துகள், 18 புதிய சிற்றுந்துகள் (Small Buses) ஆகியவற்றை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் முன்னேற்றத்தில் போக்குவரத்து சேவை முக்கிய பங்கு வகிக்கிறது. மாநிலத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப, கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்கள் விரிவடைந்து வருகின்றன. பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு, புதிய பேருந்து சேவைகளை துவக்கி வைத்தல், புதிய வழித்தடங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் 23 வழித்தடங்களில் 50 மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான பேருந்துகள், 4 புதிய வழித்தடங்களில் 4 பேருந்துகள், தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில் 202 பேருந்துகள், சேலம் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 78 பேருந்துகள், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 25 பேருந்துகள், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 63 பேருந்துகள், என 422 பேருந்துகளும் மற்றும் கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் மலைப்பிரதேசங்களில் இயக்குவதற்கு ஏதுவாக 18 சிற்றுந்துகளும் (Small Buses) என மொத்தம் 100 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 440 புதிய பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் த. பிரபாகர ராவ், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் திரு. மே. பாலகிருஷ்ணசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 12.10.2015